# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
கார்த்திகை 17
முஹறம் 2
ஞாயிறு (3-12-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 53
விலே சதம் 60


## மட்டுநகர் தமிழிளைஞர்களை அரசு விடுதலை செய்யுமா?

சூருவளியாலும் கடற்பெருக்காலும் மட்டக்களப்பு அழிந்து போய்க் கிடக்கிறது. யார் இறந்தார்கள், யார் உயிரோடு இருக்கிருர்கள் என்பது பற்றிய விபரம் தெரியவில்லை. இந்நிலையில் மட்டக்களப்பிலுள்ள தம்பெற்ரேர் உற்ரேர் உறவினர்களின் நிலையென்னவாகியிருக்குமோ என்று ஏங்கிக் கலங்கிக்கொண்டிருக்கின்றனர்— கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் மட்டக்களப்பைச் சேர்ந்த பதினெரு தமிழ் இளைஞர்கள். கடந்த செப்டம்பர் 6ம் திகதி அரசியல் சட்டத்தை எதிர்த்ததற்காக கைது செய்யப்பட்ட காசிஆனந்தனையும் மற்றும் 10 மட்டக்களப்பு இளைஞர்களையும் அவர்களதுபிறந்த ஊரே அழிந்துபோய்க் கிடக்கும் இச்சமயத்தில், அரசாங்கம்மனிதத்தன்மையுடன் விடுதலை செய்யுமா என்று ஜனதிபதியிடம் கேட்கின்றனர் மட்டக்களப்பு இளைஞர்கள்.

அண்மையில் சென்னைக்கு சென்றிருந்த ஜே. ஆரை எதிர்த்து சென்னை நகர வீதிகளில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளின் போட்டோஸ்ராட் படம் இது.




# அமிர் தலைமையில் கூட்டணி பா.உ.க்கள் நிவாரண வேலைகளை நேரடியாகக் கவனிப்பர்!

## உடனடியாக உதவிப்பணம் வழங்கும்படி ஜனதிபதியிடம் வலியுறுத்து!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபரும் எதிர்க்கட்சித் தலைவருமாகிய திரு அ, அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தொண்டர்களும் மட்டக்களப்பில் தங்கியிருந்து சூருவளி நிவாரணப் பணிகளை நேரடியாக துரிதப்படுத்தவுள்ளனர். தலைவர் திரு. அமிர்தலிங்கமும் கூட்டணி பா.உக்களும் இதற்காக அங்கு விரைவில் செல்லவிருக்கின்றனர்,

கிழக்கு மாகாண மக்களுக்கு சூருவளி நிவாரண வேலைகளைத் துரிதப்படுத்துவது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் திரு.அமிர்தலிங்கம் ஜனதிபதி ஜே. ஆர், ஜெயவர்த்தனவைச் சந்தித்துப்பேச்சுவார்த்தைநடத்தியுள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ரொக்கப்பணத்தை உடனடியாக வழங்குமாறு அவர் ஜனதிபதியிடம் கோரியுள்ளார்.

மட்டக்களப்பில் நிவாரணப் பணிகளை நேரடியாகக் கவனிப்பதற்காக மானிப்பாய் பா. உ. திரு. தர்மலிங்கம், யாழ் பா.உ. வெ. யோகேஸ்வரன், மன்னர் பா. உ. திரு; பி. எஸ். சூசைதாசன் ஆகியோர் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

வெள்ளத்திஞலும், சூருவளியிஞலும் பாதிக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாண மக்களுக்கு உதவுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உக்கள் தமிழ் இளைஞர் பேரவையினர், தமிழ் மகளிர் பேரவையினர், யாழ்வளாகத் தமிழ் மன்றத்தினர், தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்தினர் ஆகியோர் ஏற்கெனவே உணவு, உடை நிதி சேகரிக்கத் தொடங்கியுள்ளனர். யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் இவை சேகரிக்கப்படுகின்றன—

யாழ்ப்பாணத்தில் தமிழ் மகளிர் பேரவை பொதுச் செயலாளர் திருமதி.அமிர்தலிங்கம், திருமதி வி. யோகேஸ்வரன், சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம், வட்டுக்கோட்டை பா. உ. திரு நாவுக்கரசு, கோப்பாய் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை ஆகியோரும் தமிழ் இளைஞர் பேரவை பிரதிநிதிகளும் கடைகடையாகச் சென்று நிதியும் உணவுப் பொருட்களும சேகரித்துள்ளனர்.

ஆங்காங்கே கூட்டணியின் மூலக்கிளை உறுப்பினர்களும் இவற்றைச் சேகரித்து தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கவிருக்கின்றனர். இவை லொறிகள் மூலம் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்படும்,

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவிபுரிவதற்காக தமிழ் இளைஞர் பேரவைத்

—4-ம் பக்கம் பார்க்க

# கத்திமுனையில் கற்பழித்த சிறீலங்கா பிக்குவுக்கு 6 மாத சிறைத் தண்டனே!

24 வயதுடைய அவுஸ்ரேலிய யுவதியொருத்தியை கற்பழித்த சிறீலங்காவைச் சேர்ந்த 19 வயதுடைய இளம் புத்தபிக்கு ஒருவருக்கு லண்டனிலுள்ள நீதிமன்றம் ஒன்று ஆறுமாத சிறைத்தண்டனை விதித்துள்ளது. இச் செய்தியை ல்ண்டன் டெயிலிடெலி இராப் வெளியிட்டுள்ளது.

17-11-78 'டெயிலி கிராப்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி சம்பவம்வருமாறு:—

ஒரே இரவில் தனது சமயக் கோட்பாடு இரண்டையும் உடைத்தெறிந்த 19வயது புத்தகுருவுக்கு கற்பழிப்புக்காக 6மாத சிறைத்தண்டனை கிடைத்தது.

சிறீலங்காவைச்சேர்ந்த புதி அங்கங்கொட வஜீரா என்ற புத்தபிக்கு, பௌத்தர்கள் மது அருந்தக்கூடாது என்று பௌத்த மதம் விதித்துள்ளதடையை மீறி மது அருந்தும் விடுதி ஒன்றுக்கு சென்று 'சிடார்' எனப்படும் மதுவை முதலில் குடித்தார் என்று கிறவெசன்ட் கிரௌன் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்பின், மாணவர் விடுதியொன்றுக்குச் சென்று, தனது மற்ரேர் மதக்கொள்கையாகிய பிரமசரிய விரதத்தை மீறி 24 வயது நிரம்பப்பெற்ற அவுஸ்ரேலிய யுவதியுடன் உடலுறவுவைத்துக்கொண்டார்.

கத்தியைக்காட்டிப்பயமுறுத்தியேகுறித்தபௌத்தபிக்கு தம்மை உடலுறவுக்கு அழைத்ததாகவும், அதற்கு சம்மதிக்காவிடின் தம்மைக் கத்தியால் குத்திவிடுவாரென்ற அச்சத்தின் காரணமாகவே தாம் அதற்கு சம்மதித்ததாகவும் அவுஸ்ரேலியயுவதி கூறினுள்.

கற்பழிப்புக்காக மேற்படி நீதிமன்றம் 19 வயதுடைய புதி அங்கங்கொட வஜிராவுக்கு ஆறுமாத சிறைத் தண்டனை விதித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதட்டளவில் பேசுவது தார்மீகத் தத்துவம்!

# செயலில் தமிழர் உரிமைகளுக்கு குழிபறிப்பு!!

## ஜனதிபதி ஆட்சியின் அலங்கோலத்தை அம்பலப்படுத்த அருமையான நாள் டிசம்பர் 10

### தமிழர் விடுதலைக்கூட்டணி இதைப் பயன்படுத்துமா?

தற்போது பதவியில் உள்ள அதி உத்தம ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன அடிப்படை ஜனநாயக மனித உரிமைகளைத் தாம் பெரிதும் மதித்துநடப்பவர் போன்று உலக நாடுகளின் கண்ணில் தோற்றம் தரவேண்டுமென்பதற்காக பல்வேறு வழிகளிலும் போலியாக நடித்து வருகிருர்.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது பழமொழி! ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனத்தில் சில பிரகடனங்கள் புறநீங்கலாக பலதைத் தமது 1978ஆம் வருட அரசியல் யாப்பிலும் சேர்த்துள்ளதாக பீற்றிக் கொள்ளும் தார்மீக சமத்துவசாமியார் மாணவர் தாய் மொழியே போதன மொழியாக அமைய வேண்டுமென்ற கல்விமேதைகளின் கோட்பாடுகளுக்கு விலக்காக பெற்ருர் விரும்பிய தேசிய மொழிகளுள் ஒன்று மாணவர் போதன மொழியாக அமையலாம் என்று விதித்துள்ளார்.

#### போதனமொழி

தென்னிலங்கையில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு மூடுவிழா, பாடசாலைகளில் உள்ள தமிழ்ப் பிரிவுகளுக்கு மூடுவிழா, காலியாகும் தமிழ் ஆசிரியர் பதவிகளுக்கு பதில் நியமனம் இல்லாத சூழ்நிலையில் வேறு வழியின்றி தம் குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெற்ருர்-சிங்கள மொழிப் போதனையை விட்டால் வேறுவழியில்லாத நிலையில்-சிங்களம் மூலம் படிப்பிக்க முன்வர வேண்டுமென்பதே ஆட்சியாளரின் சதித்திட்டம். இதனுல் இந்திய வம்சாவழித் தமிழ்க் குழந்தைகள் தமது தனித்துவத்தை இழந்து காலப் போக்கில் சிங்களவர்களாக மாறமாட்டார்களா என்ற அங்கலாய்ப்பு! நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளில் வசித்த தமிழ்க் கத்தோலிக்க மக்கள் தமது போதன மொழியாக சிங்கள மொழியைத் தெரிந்து கொண்டபின் இரண்டொரு சந்ததி காலத்துள் சிங்களவராக மாறிவிட்ட உதாரணத்தால் தார்மீக சமத்துவசாமியாருக்கு இப்படியொரு ஆசை. மலையகத் தமிழ்த் தொழிலாளர்களது தனித்துவத்தைப் பேணுவதில் நிரம்பிய ஆசை கொண்ட சத்தியமூத்தி தொண்டைமானுல் இதை எப்படி சகித்துக்கொள்ள முடிகிறதோ? அரசமைப்புத்திட்ட விவாதத்தின் போதும் சமத்துவம் அற்ற போதன மொழிக்கொள்கையைக் கண்டிக்கத் தவருத சாமானிய தலைவர் தொண்டைமான் அமைச்சர் தொண்டைமானுக மேற்படி நிலையை மாற்ற என்ன செய்யப்போகிருர் என்பதைத் தமிழ் கூறு நல்லுலகம் உன்னிப்பாக அவதானிக்கவே செய்கிறது.

#### சிங்களக் குடியேற்றம்

தமிழ் ஈழத்தில் மேற்கொள்ளப்போவதாக ஜே. ஆர். அறிவித்துள்ள சிங்களக் குடியேற்றங்களும், சிங்கள நாட்டுக்கான தமிழர் புலப் பெயர்வும், மரபுவழித் தமிழர் தாயகத்தைப் பறிக்கும் தமிழின் சங்காரத்துக்கான (தார்மீக சமத்துவ) விசவித்தேயன்றி வேறல்ல! இது பண்பாட்டு அடிப்படையிலான பாரபட்ச நடவடிக்கையே என்று யூனெஸ்கோ கூறுகிறது; இனக்கொலை நடவடிக்கையாக ஐ. நா. சபையும் ஒப்புக் கொள்கிறது.

ஆயினும், கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் யூதக் குடியேற்றங்களைப் பகிரங்கமாகவே கண்டிக்கத் தலைப்பட்டிருக்கும் ஜிம்மி கார்டர் போன்ற உலகத் தலைவர்கள்கூட தமிழர் தாயகம் பறிக்கும் ஜே. ஆர். திட்டத்தை இன்னமும் கண்டிக்க முற்படவில்லை! யென்ருல், பாலஸ்தீனிய அகதிகள் பிரச்சினை உலகின் கவனத்தை ஈர்த்த அளவுக்கு தமிழர் பிரச்சினை உலகின் கவனத்தைஎட்டவில்லையென்று தான் அர்த்தம். தமது நிலையை அடிக்கடி உலகு நினைக்கும் அளவுக்கு பாலஸ்தீனியர் விடுதலை இயக்கங்கள் சதா தலையிடிகளை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

பலாத்கார இயக்கங்களால்தான் அப்படிச் செய்ய முடியுமென்பதல்ல! தமிழ் ஈழ விடுதலை வீரர் லண்டனில் கிரிக்கெட் போட்டிகளின்போது நடத்திய ஆர்ப்பாட்டங்களாலும், சம்பிரதாயங்களைப் பக்கவாட்டால் கடந்து தமிழ் ஈழத்தின் குரலை உலக மன்றத்தில் ஒலித்த திரு. வைகுந்தவாசனும் உலகின் கவனத்தை ஈர்க்கவே செய்தார்கள். அது போதாது. தமிழ் ஈழத்திலும் ஏதாவது நடைபெறல்வேண்டும். அப்போதுதான் தாக்கம் பெரிதாக இருக்கும் கவனம் ஈர்க்கப்படும்.

மனித உரிமைகளை மதிப்பவர்களாகக் காட்டிக்கொள்பவர்களது போலித்தனத்தை அம்பலப்படுத்த ''மனித உரிமைகள் தினமே'' பொருத்தமானது. ஆயின் வெறும் கண்துடைப்புக் கருத்தரங்குகளை மட்டும் நடத்துவதால் பயனில்லை. அன்றைய தினம் தமிழர்விடுதலைக்கூட்டணியினர் தமிழ் ஈழத்தில் கடையடைப்பு, பாடசாலைப் பகிஸ்காரம் போன்ற நேரடி நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். உலகத் தலைநகரங்களிலுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கங்கள் சாத்வீக ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களை நடத்தும்படி கேட்கப்படலாம். யாவும் தமிழ் ஈழத்தில் இடம்பெறவிருக்கும் இனக்கொலை நடவடிக்கைகளையும், மனித உரிமைகள் மறுப்பையும் அம்பலப்படுத்தும் செயல் திட்டங்களாகப் பிரகடனப் படுத்தப்படல் அவசியம்.

#### விளக்கமறியலில் தமிழ் இளைஞர்

விசாரணைக்குக் கொண்டு வரப்படாதும் அல்லது விசாரணைகளைத் துரிதப்படுத்தாது வேண்டுமென்றே நீடித்துக்கொண்டும் விளக்கமறியலில் வாட்டி வதைக்கப்படும் தமிழ் இளைஞர்களது விடுதலைக்கும் மேற்படி நேரடி நடவடிக்கைகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

திருகோணமலையில் பாடசாலையில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நியாயம் கிடைக்கப் பாடுபடவும் அந் நடவடிக்கைகள் பயன்படுமென நம்பலாம்! இவ்வகையில் நடவடிக்கையில் இறங்கப் போவதாக அறிவித்துள்ள இளைஞர் பேரவையும் தமது நேரடி நடவடிக்கைகளுக்கு உலகின் கவனம் திருப்பப் படவேண்டி அதற்கான நாளாக ''மனித உரிமைகள் தினத்தையே'' தெரிந்து கொள்ள வேண்டுமென்று பரிந்துரைக்கிருேம்.

மனித அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்காக நடத்தப்படும் போராட்டங்களுக்கு மனிதஉரிமைகள் தினத்தைவிட தகுந்த நாள் பிறிதொன்று கிடையாது. மனித உரிமைகள் தினத்துக்கான நேரடி நடவடிக்கைகள் வெகுஜன இயக்கமாக அமைவதே சாலச் சிறந்தது. எதிர்வரும் 10-12-78ல் வரும் ''மனித உரிமைகள் தினத்தை'' ஏற்ற முறையில் பயன்படுத்தும் திட்டங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவிக்குமென எதிர்நோக்குவோம்.

—திரவியம்

---

# இனவாரி விகிதாசாரத் திட்டத்தை எதிர்த்து ஜீவமரணப் போராட்டம் நடைபெறும்!

### யாழ் வளாக மாணவர்கள் சார்பில் ஜனதிபதிக்குப் பகிரங்கக் கடிதம்!

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக மாணவர் மன்றத்தின் சார்பில்ஜனதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு மன்றத்தலைவர் திரு. வ.ஜ.ச. ஜெயபாலன் பின்வரும் பகிரங்கக் கடிதத்தை விடுத்துள்ளார்:-

மாண்புமிகு ஜனதிபதி
அவர்கட்கு,

சென்ற அரசினுல் இலங்கை பல்கலைக்கழகஉபவேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் சிறிவர்த்தன உயர் கல்விஅமைச்சு மௌனமாக இருக்கும் போது தன்னிச்சையாகவும் குறுகிய அரசியல் நோக்கமுள்ள ஒரு சில அரசியல்வாதிகளுக் கூடாகவும் தமிழ் மாணவர்களுக்கும் தமிழ் உயர் கல்வி வட்டத்தினருக்கும் எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருவதை வன்மையாகக் கண்டிக்கின்ருேம். பொறுப்பற்ற இவர் செய்கை மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகின்ருேம்.

இவரைப்போலவே கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரும் கல்வி அமைச்சு மௌனம் சாதித்து வரும் இத் தருணத்தில் தமிழ்க் கல்வித்துறையை, அவதூறு செய்யும் நோக்கத்துடன் செயற்பட்டு வருகின்ருர். இவர் தமிழ், சிங்கள மாணவர்களது விடைத்தாள்களை பொதுவாக ஆராய்ந்து திரட்டப்பட்ட புள்ளிவிபரங்களை ஆதாரமாகக் கொண்டு குற்றங்களைச் சுமத்தவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்ருேம். இவர் தெரிவு செய்து எடுத்து வைத்துள்ள அந்தரங்கமான விடைத்தாள்கள் கல்வி அமைச்சுக் கூடாக அவருக்குவழங்கப்படவில்லை என்பது மேலும் அதிர்ச்சி தருவதாகும். உங்கள் அமைச்சர்களுக்கிடையில் ஏதாவது இழுபறிகள் இருக்குமாயின் அதையிட்டு நாம் கருத்து வெளியிட விரும்பவில்லை ஆனுல் அவர்கள் தமிழ் மாணவர்களதும் தமிழ் உயர்கல்வி வட்டத்தினரதும் தலைகள் மீது தங்கள் பலத்தை பரிசீலிக்க முனைவதை நாம் அனுமதிக்க முடியாது என்பதை இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்ருேம். இவர்களது குற்றச் சாட்டு தமிழ்உயர்கல்வி வட்டத்தினர் முன் கூட்டியே பரீட்சைகளுக்கான விடைகளை வெளியிடுவதன் மூலமும் முறைகேடான வகையில் அதிக புள்ளிகள் வழங்குவதன் மூலமும் தமிழ் மாணவர்களுக்கு சலுகை செய்கின்றனர் என்பதாகும். இதற்கு ஆதாரமாக யாழ்ப்பாண வளாக விஞ்ஞான பீட பொதுப்பட்டத்தேர்வு (B.S C.) பெறுபேறுகள் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

மேற்படி பரீட்சை விடைகள் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டது என்பதையும் சிங்கள விரிவுரையாளர்களாலும் அவை திருத்தப்பட்டன என்பதையும் அந்தப் பொறுப்புள்ள அமைச்சர் அறிந்திருக்கவில்லை. மேலும் மேற்படி பரீட்சையில் தவறிய சிங்கள மாணவர்களது வீதம் 16.7 ஆகவும், தமிழ் மாணவர்களது வீதம் 24.2 என்பதையும் அவர் அறிவாரா?

யாழ் வளாக கொழும்பு பிரிவுலுள்ள சிங்கள மாணவர்கள் உட்பட எந்த ஒரு சிங்கள மாணவரது பிரச்சனைகளிலும் அக்கறை காட்டாத கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் வித்தியலங்கார வளாகத்தினுள் வெளியிலுள்ள சில காடையர்கள் நுளைந்து மாணவர்களைத் தாக்கிய சம்பவங்களில் சிங்கள மாணவர்களுக்கு நேர் விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்ட கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் இன்று சிங்கள

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# பவலின் தலை உருண்டது மத்தியூவின் நிலையென்ன?

## பாராளுமன்றத்தில் யோகேஸ்வரன் பா. உ.

''வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது, அரசாங்கத்தைச் சேர்ந்த பல உறுப்பினர்கள், தமிழர் விடுதலைக்கூட்டணியைக் கட்டித் தழுவிக் கொள்வதிலே தமது ஆர்வத்தைக் காட்டினர்கள் இவ்வாறு எம்மைக் கட்டித் தழுவுவதிலே அவர்கள் காட்டிய ஆர்வம் எமது கழுத்துக்குப் போடும் சுருக்குக் கயிருகி விடுமோ என்ற நியாயமான பயம் எனக்கு ஏற்படுகிறது. இதே சமயம் நாள் தோறும் இச்சபையிலே கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் (சிறில் மத்தியூ) அவர்களோ எம் மீது வசைமாரி பொழிந்து வருகிருர். கௌரவ கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் இவ்வாறு எம் மீது பழியுரைக்கும்போது பண்பாடு நிறைந்த நிதியமைச்சரின் கருத்தைப் பிரதிபலிக்கிருரா? அல்லது ஜனுதிபதியின் கருத்தைப் பிரதிபலிக்கிருரா? அல்லது பிரதமருடைய கருத்தை எடுத்துக் கூறுகிருரா? அன்றேல் தன்னுடைய கருத்தை எடுத்துக் கூறுகிருரா? அன்றேல் தன்னுடைய சொந்தக் கருத்தையே கூறுகிருரா என்பதை நாம் தெரிந்து கொள்ள விரும்புகிறேம். ஜனுதிபதி ஆட்சி முறையின் கீழ் அமைச்சர்களுக்குக் கூட்டுப் பொறுப்பு என்பதே கிடையாதா?''

இவ்வாறு வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய யாழ் பா. உ. திரு. வெ. யோகேஸ்வரன் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினர்,

ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்ததிஸ்ஸ டி அல்விசை தொடர்ந்து பேசிய திரு. யோகேஸ்வரன் தமது உரையில் மேலும் கூறியதாவது:

பாராளுமன்ற ஜனநாயகத்தின் தாய் வீடான இங்கிலாந்தில் அங்கு குடியேறி வாழும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக நிழல் அமைச்சராக இருந்த நொச்பவல் இனவெறிப்பிரசாரம் செய்தபோது, நிழல் பிரதமரான ஹீத் அவர்களால் உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டாரென்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த விவாதத்தின்போது தமிழர் பிரச்சினை சம்பந்தமாக, எம்மீது பெரியதடி கொண்டு முதலில் அடிக்கப்பட்டது. இப்போது இராஜாங்க அமைச்சர் தமது பேச்சின் போது 'கரட்யூஸ்' தருகிருர்.

யூ. என். பி. எதிர்க்கட்சியில் இருந்தபோது. தமிழர்களின் தனிநாடு கோரிக்கையை அனுதாபத்துடன் பார்த்தது. இப்போது ஆட்சிபீடமேறியதும், தனிநாடு கோருவதைத் தேசத்துரோகம் என்று வர்ணிக்கிறது.

இந்த வரவு செலவுத்திட்டத்தைப் பொறுத்தவரை, இது ஒரு வெளிப்படையான 'ஐ. தே. க. பட்ஜட்'டாகவே காணப்படுகிறது. மேல்தட்டு வர்க்கத்துக்கு அதிக சலுகைகளையும், மத்தியதர வர்க்கத்துக்கு ஒரு சில சலுகைகளையும் இந்த வரவு செலவுத் திட்டம் கொடுத்திருக்கிறது. ஆனல் நாட்டு விவசாயிகளின் நிலைமை என்ன?

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் நெல்லின் உத்தரவாத விலை 33 ரூபாவிலிருந்து 40 ரூபாவுக்கு உயர்த்தப்பட்டது. அவ்வாருன சலுகைகள் கூட விவசாயிகளுக்குத்தாப்படவில்லை. பெரிய கொம்பனிகளுக்கும், முதலாளிகளுக்குமே சலுகை வழங்கப்பட்டிருக்கிறது.

பட்ஜட்டில் துண்டு விழும் தொகையை வெளிநாட்டுக் கடன்களால் நிதி அமைச்சர் சரிக்கட்டியிருக்கிருர். இதனுல் வெளிநாடுகளுக்கு இலங்கைத் தீவு அடவு வைக்கப்படுகிறது; எதிர்காலச்சந்ததி அடவு வைக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்படும் கடன்களை எவ்வாறு திருப்பிச் செலுத்தப் போகிறீர்கள்?''

## சிறிமாவோ ஆட்சியிலிருந்த பாதுகாப்பு

## ஜே. ஆர். ஆட்சியில் தமிழருக்கில்லை!

## அமிர் சொன்னது முற்றிலும் உண்மை!

—தர்மர்

இவ்வாறு திரு. யோகேஸ்வரன் கேட்டார்.

மானிப்பாய் பா.உ. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

''வேகமாகவும் விறுவிறுப்பாகவும் இயங்கும் எதிர்கட்சியின் அவசியத்தை இந்த வரவு செலவுத்திட்டம் தெளிவாக எடுத்துக்காட்டி விட்டது, இந்த அரசைப் போன்ற பெரும்பான்மைப் பலம் கொண்ட ஒரு அரசு, மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விடும். மக்கள் படும் வேதனைகளும் தொல்லைகளும் ஆட்சியாளர்களுக்குத் தெரியவராது.

இங்கு பேசிய அரசாங்கக் கட்சி உறுப்பினர்கள் சிலர் எமக்கு ஜீப்புக்கள் தந்ததைப் பற்றிக்குறிப்பிட்டார்கள். அரசாங்கம் எமக்கு ஜீப்புக்கள் தந்தது உண்மைதான். ஆனல் அவை ஏதோ எமக்கு இலவசமாகத்தரப் பட்டவை அல்ல. அவற்றுக்குரிய பணத்தை தவணை முறைகளில் நாம் செலுத்தி வருகிறேம். முந்திய அரசாங்க காலத்திலே கூட இவ்வாறு நடைபெற்றிருக்கிறது இதற்காக நாம் எமது அரசியல் இலட்சியங்களை கைவிட்டு உங்களிடம் நாம் சரணுகதியடைய வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

இவ்வரவுசெலவுத்திட்டத்தில் பேசியவர்கள் ...

கொள்கையை யொட்டிய விஷயங்களை மட்டும் பேசாது வேறு விஷயங்களையும் பேசியிருக்கிருர்கள். 1972ம் ஆண்டுக்கு முன் அரியணை உரைநிகழ்த்



தப்படும் முறையும், அதை யொட்டி அரசின் கொள்கைகளை விவாதிக்கும் முறையும் இருந்தன; பின்னர் அது கைவிடப்பட்டது. கொள்கை விளக்க உரை யென்ற பெயரில் அரியணை உரை விவாத முறையை மறுபடியும் இந்த அரசு புதுப்பிக்கக்கூடும் என்று எதிர்பார்த்தேன். ஆனல் அப்படி நடைபெறவில்லை. அப்படி நடைபெற்ருல் வரவுசெலவுத்திட்டவிவாதத்துக்குள் ஏனைய விஷயங்களைப் பேசாமல் தவிர்த்துக் கொள்ளமுடியும்.



''நிதியமைச்சர் இங்கு சமர்ப்பித்துள்ள வரவுசெலவுத்திட்டம், அதே பழைய யூ. என். பி. யின் பழைய பாணியில் தயாரிக்கப்பட்டிருக்கும் ஓர் அசல் யூ.என்.பி. பட்ஜட்டாகும் யூ. என். பி. ஏதோ ஒரு புதிய கட்சியல்ல; அதே பழைய யூ. என். பி.யே இப்போதும் பதவியில் இருக்கிறது.

அபிவிருத்தியென்ற பெயரில் வரவுசெலவுத்திட்டம் ...

...யில் மரக்கறிகளின் விலைகளில் நான்அக்கறையுடையவன். இச்சபையிலே அமைச்சர் மரக்கறி வகைகளின் விலைகளை வாசித்தபோது, இவ்வளவு மலிவான விலையில் எங்கே மரக்கறிகளை வாங்கமுடியும் என்று நான் ஆச்சரியமடைந்தேன். மறுநாள் அமைச்சர் கூறிய அதேவிலையில் மரக்கறிவகைகள் கிடைக்கிறதா என்பதை அறிவதற்காக மக்கள் சந்தைக்குச் சென்று விசாரித்தேன். அப்போது எனக்குக்கிடைத்த விலைவாசிப் பட்டியல் வேறு விதமாக அமைந்திருக்கிறது.

ஒரு இருத்தல் கரட் 2ரூபா 10சதம். பீன்ஸ் 2ரூபா 45சதம், கத்தரிக்காய் இரண்டுரூபா, புடலங்காய் ஒருரூபா அறுபதுசதம், எலுமிச்சம் பழம் எட்டு ரூபா, பூசினிக்காய் இரண்டு ரூபா, பீட்றூட் ஒருரூபா எண்பதுசதம்— இவ்வாருக விற்கப்பட்டன. இப்படியானுல், எனது குடும்பத்தை போன்று தாயும், தந்தையும், மூன்று பிள்ளைகளும் கொண்ட ஒரு மரக்கறியுணவுக் குடும்பத்துக்கு ஒருநாள் உணவுக்கே எவ்வளவு செலவாகும்?

அரசாங்கம், நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான பொறுப்பை தனியார் துறையினரிடமே கையளித்திருக்கிறது. தனியார்துறையினரிடம் அபிவிருத்தி வேலைகளை ஒப்படைத்ததன் மூலம்—பணக்காரர் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவுமே வழிவகுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு சலுகை வாய்ப்புக்களையும் அளிக்கிறது. இதற்குப் பிரதியுபகாரமாக பணக்காரவர்க்கம் திருப்பி எதைச் செய்யப் போகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். எதிர்கால வரலாறு அதை நிச்சயம் காட்டும்.

மத்திய தரக்குடும்பங்களை அமைதிப்படுத்துவதற்காக அவர்களுக்கு அரசு சில சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. இந்தச் சலுகைகள் கூட எதிர்வரும் பெப்ரவரி மாதத்துக்கு மேல் நிலைக்காது. ஏனெனில் பெப்ரவரி மாதம் உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிவடைந்தவுடன் அரசாங்கம் விலைவாசிகளை மறுபடியும் கூட்டும்.

இச்சபையில் பேசிய வர்த்தக அமைச்சர் தமது பேச்சின்போது சில காய்கறிகளின் விலைகளை வாசித்துக் காட்டினர். நான் மரக்கறி உணவுக்காரன் என்ற முறை

படைத்ததன் மூலம்—பணக்காரர் மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகள் மேலும் ஏழைகளாகவுமே வழிவகுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பின்தங்கியநாட்டிற்கு உண்மையான அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்ருல்— ஒரு திட்டமிடப்பட்ட சோசலிச பொருளாதாரமே தேவை. இன்றைய அரசாங்கம் தன்னை ஒரு ஜனநாயக சோசலிசக் குடியரசு என்று கூறிக்கொள்கிறது. ஆனல் எங்கே சோசலிசம்?

எமது எதிர்க்கட்சித்தலைவர் அண்மையில் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்த போது, திருமதி சிறிமா பண்டாரநாயகா ஆட்சியின் கீழ் தமிழர்கள் கூடிய பாதுகாப்புடன் இருந்ததாக குறிப்பிட்டிருந்தது பற்றி இங்கு பேசிய அரசாங்கக்கட்சி உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

ஆனல் இன்றைய ஜனுதிபதி அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோதும் இதேமாதிரியாகவே நடந்து கொண்டார். இலங்கையில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொண்ட வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம், அப்போதைய அரசாங்கத்தைக் கண்டித்து, அப்போதைய எதிர்க்கட்சியாகிய யூ. என். பி. ஒரு பிரசுரத்தையே அச்சிட்டு விநியோகித்தது. அந்தப்பிரசுரம் இதோ எனது கையிலேஇருக்கிறது.

எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில் அன்று திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இவ்வாறு முன்மாதிரியைக் காட்டியிருக்கும் போது, எமது இலட்சியத்துக்கு இன்றைய எதிர்க்கட்சித்தலைவர் சர்வதேச ஆதரவைத் திரட்டுவதிலே என்ன பிழையைகாணமுடியும்?

''திருமதி பண்டாரநாயகா ஆட்சிக்காலத்தில் தமிழர்களுக்கெதிரான இனக் கலவரம் எதுவும் நடந்ததில்லை. ஆகவே தமிழர்கள் சிறிமா ஆட்சிக்காலத்தில் கூடிய பாதுகாப்புடன்இருந்ததாக கூறியதில் என்ன தவறு இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதமல்ல - கண்ணீர்த்துளிகள்!

அன்பு நண்பா,

நான் இம்முறை உனக்கு எழுதுவது கடிதமல்ல—கண்ணீர்த்துளிகள்; நான் எழுதுவது எழுத்துக்கள் அல்ல—இதயம் வெடித்து அதிலிருந்து வடிகின்ற வேதனைத்துளிகள். எதைத்தான் எழுதுவேன்? எப்படித்தான் எழுதுவேன்? என் தமிழ் மக்களுக்கு இப்படியும் ஒரு வேதனையா? இப்படியும் ஒரு சோதனையா?

இயற்கைத்தாயின் எழில் கொஞ்சும் பூமியாக—தமிழ் ஈழத்தின் சோற்றுச் சுரங்கமாக-கன்னலும் செந்நெல்லும் கட்டிப் புரண்டாட—முட்டித்தயிரும், கட்டித் தேனும் வழிந்தோட—நாம் யார்க்கும் குடியல்லோம் என்று தலைநிமிர்ந்து வாழ்ந்திருந்ததென் தமிழ் ஈழமாம் மட்டக்களப்புத் தாய் இன்று பொட்டிழந்து பூவிழந்து பொலிவிழந்து தலைவிரி கோலமாக 'ஓ' வென்று அரற்றுகிறாளே—இந்தக் கொடுமையை எப்படித்தான் தாங்கிக்கொள்வது? எப்படித்தான் அவளுக்கு ஆறுதல் கூறுவது?

அழிவுத்தெய்வம் தன் கோரக்கரங்களை தமிழ் ஈழத்தை நோக்கியா நீட்டவேண்டும்? அரசியலில் எதிர்ப்பட்ட எத்தனையோ புயல்களையெல்லாம் தாங்கிக்கொண்டு — சத்தியமூர்த்தியாம் தந்தை செல்வாவின் அணியுடன் தம்மை நிரந்தரமாக இணைத்துக்கொண்டிருக்கும் தன்மானச் செல்வங்களான கிழக்கு மாகாணத்தமிழ் மக்களையா அது பலிகொள்ள வேண்டும்?

சென்ற—1977ம் ஆண்டுதான் இனக்கலவரம் என்ற பெயரில் சிங்களவர்களின் ஆதிக்க வெறியாட்டம் என்ற இனவாதச் சூறாவளி தமிழ் சமுதாயத்தை மிக மோசமாகத் தாக்கியது. அந்தக் பயங்கரமான தாக்கத்திலிருந்து— அந்தக் கொடுமையான நினைவுகளிருந்து இன்னும் விடுபடாத நிலையில் — இந்த ஆண்டு இயற்கையன்னை சீறியெழுந்து ஊழிக்கூத்தாடி தமிழ் சமுதாயத்தைப் பந்தாடி விட்டாளே!

சிங்கள ஏகாதிபத்தியச் சூறாவளியை எதிர்த்து தாக்குப்பிடித்துநின்ற கிழக்கு மாகாணத் தமிழ் மக்களை, வங்கத்திலுருவாகிய சூறாவளி வலுவிழக்கச் செய்துவிட்டதே! பொங்கியெழுந்த கடலும் தமிழனை விழுங்கிய பொல்லாத காட்சியை காணுகின்ற துயர நிலை சூழ்ந்ததே! இந்த வேதனைகளிலிருந்து எப்படித்தான் மீளுவதோ?

கடல் கொந்தளிப்பும், கடல்கோளும் ஆதிகாலத்திலிருந்தே தமிழனது எதிரிகள் தாம். முதல், இடை, கடை, முச்சங்கங்களும் கூடக் கடல் கொண்டவை தாம்; பஃறுளியாறுபாய்ந்த தென்பாலிநாடும், குமரியாற்றின் கரையிலிருந்த பெருவளநாடும், கடல் கொண்ட தமிழர் நாடுகள்தாம். இன்று எஞ்சியிருக்கும் தமிழர் நாட்டிலும் கடல் பொங்கி தமிழர்களை விழுங்கியிருக்கிறது!

ஆம் நண்பா, விசுவரூபம் கொண்டு வீசிய சூறாவளியினாலும் கடற்பெருக்கினாலும் துடித்து மாண்டு மடிந்துபோனஎம்மக்கள் எத்தனைபேரோ—இன்னும் சரியான கணக்குக் கிடைத்திலது; அன்னை தந்தையைப் பறிகொடுத்துக் கதறிடும் மழலைப் பிஞ்சுகள்—தம் மழலைகளைப் பறிகொடுத்துக் கதறிடும் அன்னை தந்தையர் எத்தனை எத்தனையோ? கோரமாய் வீசிய பெரும்புயலால் பொட்டும் பூவும், மஞ்சளும் குங்குமமும் மங்கல நாணும் இழந்து போன குலவிளக்குகள் எத்தனையோ? தம் அன்பு மனைவியரைப்பறிகொடுத்துக் கதறும் ஆடவர்கள் எத்தனையோ? குடும்பத்தோடு மரணதேவதையை அணைத்துக் கொண்டவர்கள் எத்தனையோ?

அழிவுத்தாய் ஆடிய ஊழிக்கூத்தினால் பூவும், பிஞ்சும் மொட்டும் மலரும், காயும் கனியும், ஒரு சேர பிடுங்கியெறியப்பட்டுள்ளன; முழுச்செடியுமே பிடுங்கியெறியப்பட்டுமுள்ளது. இடிந்துபோன இல்லங்கள்; கூரைகள் பிய்த்தெறியப்பட்ட கட்டடங்கள்; சாய்ந்துபோன குடிசைகள்; வேரோடு பெயர்ந்து வீழ்ந்து போய்க்கிடக்கும் நெடிய மரங்கள்— வீதிகளின் ஒருபுறத்திலே; இடிந்து போன உள்ளங்கள், ஏக்கம்கொண்ட நெஞ்சங்கள், பீதியகலாத பேயறைந்த




கண்கள், வீதிகளின் மறுபுறத்திலே. கிழக்கு மாகாணம் எங்கணும் கொடியதுன்பத்தின் படலங்கள்! ஆற்றினாலும் தேற்றினாலும் அமைதியடையக் கூடிய நிலையா இது?

இந்நிலையில்—இயற்கையின் கொடுமைக்கு உள்ளான நம் சகோதரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது—அவர்களின் துயரைத் துடைப்பது—ஒன்றே நமது கடமை! இது சொல்லாமலே உனக்குத் தெரியும்!

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகம், யாழ் வளாகத் தமிழ் மன்றம், தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி, அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் போன்ற பல்வேறு தமிழர் அமைப்புக்களும் சமூக நிறுவனங்களும் கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்களின் துயர்துடைக்கும் பணியில் வேகமாக இறங்கியுள்ளன.

உணவுப் பொருட்கள்,
உடைகள்,
மருந்து வகைகள்,
நிதி
வைத்திய வசதி

இந்த ஐந்தும் தான் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ஈழ மக்களின் மறுவாழ்வுக்கு உடனடித் தேவைகளாகும்! நிதி மிகுத்தவர் பொற்குவையும், நிதி குறைந்தவர் காசுகளும், அதுவுமற்றோர் வாய்ச் சொல்லும், ஆண்மையாளர்கள் உழைப்பும் நல்கவேண்டிய நேரமிது! ஒவ்வொரு தமிழனும் தனது உழைப்பில் ஒரு பகுதியை நம் சகோதரர்களின் மறுவாழ்வுக்கு வாரிவழங்க வேண்டும்.

பொன்னும் பொருளும் உணவும் குவித்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவிபுரிவதுடன்—நேரடியாக அங்கு சென்று அந்த மக்களின் கண்ணீரைத் துடைத்து — கலங்காதீர்கள் கைகொடுத்திட நாமிருக்கிறோம் என்று ஆதங்கமாக ஆறுதல்கூறுவதன் மூலமே அந்த மக்கள் சற்று ஆறுதலடைய முடியும். எனவே கூட்டணி பா. உக்களும், தமிழ் இளைஞர் பேரவை, மற்றும் பொது இயக்கங்களின் தொண்டர்களும் சிலவாரங்களுக்கு தொடர்ச்சியாக மட்டக்களப்பில் தங்கியிருந்து கிழக்கு மாகாண தமிழ் மக்களின் துயரில் உடனிருந்து பங்குபெற வேண்டும். அப்போதுதான் அவர்களின் உள்ளம் ஆறுதல் பெறமுடியும்; தேறுதல் அடைய முடியும்!

சூறாவளியால் பாதிக்கப்பட்ட தமிழ் ஈழ மக்களின் துயர்துடைப்பதற்காக தமிழ் நாட்டு மக்கள் உடனடியாக உதவிக்கரத்தை நீட்டியுள்ளனர்; தமிழக அரசின் சார்பில் பத்துலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை தமிழக முதல்வர் எம். ஜி. ஆரும், தி.மு-கழகத்தின் சார்பில் கலைஞர் கருணநிதி பத்தாயிரம் ரூபாவும் அனுப்பியுள்ளனர். உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெருங்குடி மக்கள் ஈழத் தமிழ் மக்களின் துயர்துடைத்திட உதவவேண்டுமென தி.மு,க தலைவர் கலைஞர் கருணநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேபோல வேறு நாடுகளும் உதவிக்கரத்தை நீட்டியுள்ளன.

<u>வெளிநாடுகளிலேயுள்ள தமிழர்கள் தமது உதவிகளை தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.</u>

ஆம், துன்பத்தில் சாகும் சொந்தச் சகோதரர்களின் துயர் துடைத்திட நம் இதயங்களை அகலத் திறப்போம்! கரங்களை அகல விரிப்போம்! வாழ்விலும் தாழ்விலும் தமிழ் ஈழம் ஒன்றேயென்பதை உறுதிப்படுத்துவோம்.

உன் அன்புத்தோழன்

கோவை-மகேசன்

---

—5-ம் பக்கத் தொடர்

பொதுவான வெளிநாட்டுக் கொள்கையையும் பாதுகாப்பையும் தேடிக்கொள்ள முடியும், இதையே நாம் 1949ல் கோரினோம்-ஆனல் எமது கோரிக்கை செவிடன் காதிலே விழுந்தது போல அவமாகியது.

எம். எச். மொகமத்: உங்கள் அரசின் மன்னனாக யார் இருப்பார்? மூன்று இராச்சியங்களுக்கும் மூன்று அரசர்கள் இப்போது எமக்குத் தேவை!

நவம்: நடைபெறும் சம்பவங்களை நேரடியாகத்தரிசிக்க மறுத்து, கண்ணை மூடிக்கொண்டிராமல் பிரச்சினையின் அடித்தளத்தை ஆட்சியிலுள்ளோர் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரேமதாசா: தனி அரசு கிடையாது.

சிறில் மத்தியூ: மூன்று இராச்சியங்களும் எவை?

நவம்: போர்த்துக்கீயர் இந்நாட்டுக்குள் நுழைந்த போது இருந்த மூன்று அரசுகளும் எவை?

கப்டன் செனவிரத்தின: போர்த்துக்கீயர் எப்போது வந்தார்கள்?

நவம்: 1505ம் ஆண்டு.

பிரேமதாசா: இவை அனைத்தும் தேவையற்றவை நாடு முழுவதையும் நாம் இணைக்கப் போகிறோம். தனி அரசுகள் கிடையாது.

மொகமத்: ஒரு முஸ்லீம் அரசு அமையுமானல் நான் மன்னர் பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புகிறேன்.

நவம்: அவுஸ்ரேலியாவிலும் ஆபிரிக்காவிலும் பிரிட்டிஷார் தாம்கைபற்றிய பிரதேசங்களில் தங்கள் மக்களைக் குடியேற்றுவதன் மூலம் ஒற்றுமையை வளர்க்க நினைத்தார்கள். அவுஸ்ரேலியாவிலும், ஆபிரிக்காவிலும், தங்கள் ஆட்களைக் குடியேற்றி ஒருமைப்பாட்டை வளர்த்தார்கள். இந்நாட்டிலும் நீங்கள் அதையே செய்ய முடியுமென்று நான் நினைக்கவில்லை. மக்களின் சுயமரியாதையும் மண்ணையும் நீங்கள் மதிக்க வேண்டும்.''

---

## சுடர்

### மாதம் ஒரு சிறுகதைக்கு பரிசு

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக ஒவ்வொரு மாதமும் சிறந்த ஒரு சிறு கதையை தேர்ந்தெடுத்து பரிசளிக்கும் திட்டம் ஒன்றினை மார்கழி மாதம் முதல் செயற்படுத்தவிருக்கிறோம்.

சிறந்த சிறுகதைஎன நாம் தேர்ந்தெடுக்கும் கதைக்கு ரூபா 25/- பரிசாக வழங்கப்படும். ஒவ்வொரு மாதமும் இப்பரிசு வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-

ஆசிரியர்,
சுடர்
194ஏ; பண்டாரநாயக்கவீதி
கொழும்பு-12.

---

## அமிர்தலிங்கம் தலைமையில் கூட்-—

—1-ம் பக்கத் தொடர்

தொண்டர்கள் ஏற்கெனவே இரு குழுக்களாக மட்டக்களப்புக்கு சென்றுள்ளனர்.

உலக நாடுகள் வழங்கும் உதவிகள் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைக் கண்காணிப்பதில் கூட்டணி பா. உக்கள் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

தலைவர் திரு. அமிர்தலிங்கம் சென்றவாரம் மட்டக்களப்புக்கு விமானத்தில் சென்றார். மட்டக்களப்பு விமான நிலையத்திலிருந்து நகருக்குச் செல்வதற்கு வாகன வசதிகள் எதுவும் இல்லாததனல், தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் விமான நிலையத்திலிருந்து கால்நடையாகவே மட்டக்களப்பு நகருக்கு சென்று சகல இடங்களையும் சுற்றிப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறிவிட்டுத் திரும்பினர்.

மட்டக்களப்பு, கல்முனைப் பிரதேசங்களில் சூறாவளியாலும் கடற்பெருக்காலும் இறந்தவர்களின் சரியான தொகை இன்னும் தெரியவில்லை பல ஆயிரக்கணக்கில் இருக்கும் என்று கூறப்படுசிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்காகயாழ்ப்பாணத்திலிருந்து மருந்துவகைகளுடன் டாக்டர்கள் குழு ஒன்றும் விரைவில் மட்டக்களப்பு செல்லவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை கூட்டணி கவனித்துவருகிறது.

வெளிநாட்டிலிருக்கும் தமிழர்கள் சூறாவளி நிவாரணத்துக்காக அனுப்பும் தொகையை தமிழ் அகதிகள் மறுவாழ்வுக் கழகத்துக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அன்னியரிடம் பறிகொடுத்த இறைமையை மீண்டும் நிலைநாட்டுவதே எமக்குரிய வழி"

## குறுக்கீடுகளுக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் நவரத்தினம் நிகழ்த்திய உரை!

எந்த ஒரு நாட்டின் அபிவிருத்தியும் அந்த நாட்டிலே அரசியற் குழப்பம் இருக்கும்வரையும் முன்னேற்றமடைய முடியாது. ஆகவே, ஒரு நாட்டிலே அடிப்படை அரசியல் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியது அந்த நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பானவர்களுடைய அதி முக்கிய கடமையாக இருக்கிறது. இந்த விஷயத்திலேதான் நாட்டிலே இருக்கிற பலவிதமான அரசியற் பிரச்சினைகளிலே, எங்களைப் பொறுத்த அளவில் மிகவும் முக்கியமானது இந்நாட்டில் வசிக்கிற தமிழ் மக்களுடைய அரசியற்பிரச்சினையாகும்,

இந்த நாட்டிலே அரசியலில் பங்குப்பற்றுகிறவர்கள் பலருக்கும் இன்னமும் இந்த நாட்டிலே இருக்கிற முக்கியமான தமிழ்ப் பிரச்சினை என்னவென்று விளங்காமலிருப்பது மனவருத்தத்துக்குரிய விஷயம். ஜனதிபதி அவர்கள் இந்தச் சபையிலே பிரதமராகஇருந்தபொழுது தமிழ் மக்களைப் பொறுத்த அளவிலே இரண்டு முக்கிய தத்துவத்தைப் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டார். இந்தப் பிரச்சினைகள் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப் பட்ட விஷயங்கள். ஓர் இனத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்கவேண்டியதுஉலக நாடுகளின் கடமை.

கப்டன் செனிவிரத்தின: உங்களின் பிரச்சினைகள் எவையென்பதை கௌரவ உறுப்பினர் எமக்கு கூறுவாரானல்...!

நவம்: நான் உங்களுக்கு தெளிவாக அவைஎன்னஎன்பதைக் கூறுகிறேன். ஒரு தேசிய இனம் தனது தனித்துவத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு உலக சமுதாயம் உதவிபுரிய வேண்டியது அதன் கடமை.

இந்த நாட்டிலே தமிழினம் ஒரு தனி இனம் என்பதை ஏற்றுக்கொள்ளாத வரையும் தமிழ்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முடியாது.

தனி இனம் என்ருல்என்னவென்று பலஅகராதிகளிலே வியாக்கியானம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ்: எந்த அடிப்படையில் தான் இவற்றை ஏற்கமாட்டேன் என்று ஜனதிபதி கூறியுள்ளார்?

நவம்: ''ஒவ்வொரு தேசிய இனமும் தனது தனித்துவத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு உதவி புரிவது எமது கடமையென்பதை ஏற்றுக் கொள்ளுகிருேம்'' என்று அவர் கூறியிருந்தார். அதுமட்டுமன்றி நாகரிகம் படைத்த ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தேசிய இனத்துக்கும் சுயநிர்ணய உரிமையை வழங்க வேண்டுமென்பதையும் ஜனதிபதி ஏற்றுக் கொண்டார்.

ஆகவே, நீங்கள் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு உட்பட்டுத்தான் இதனைத் தீர்க்கவேண்டுமேதவிர ஏதோ புதிய கொள்கையை உண்டாக்கி' உங்களுடைய கருத்துக்கு முரணுன முறையிலே இப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய அவசியமில்லை.

சரித்திர ரீதியாக எடுத்துக்கொண்டாலென்ன, தமிழ் மக்கள் வாழ்கிற பிரதேச அமைப்பை எடுத்துக்கொண்டாலென்ன, இப்பொழுது இருக்கிற அரசியற் சூழ்நிலையை எடுத்துக் கொண்டாலென்ன, தமிழினம் ஒரு தனி இனம் என்பதை எவரும் மறுக்க முடியாது, இதைப்பற்றி இன்னும் கூடுதலான வியாக்கியானம் தேவைப்பட்டவர்கள், நீண்ட நேரமாக ஐந்து ஆறு நாட்களாக ''ரயல்அற்பார்'' வழக்கிலே மறைந்த தலைவர் திரு. திருச்செல்வம் ஆற்றிய உரையை வாசித்தால் இந்த நாட்டிலே நாம் ஒரு தனி இனம் என்பதை ஏற்றுக்கொள்வார்கள். இந்தத் தனியினத்துக்குத் தன்னுடைய வருங்காலத்தைப் பற்றி நிர்ணயிக்கின்ற உரிமை இருக்கிறது என்பதை எவராலும்மறுக்கமுடியாது. இந்தஅடிப்படையிலே நீங்கள் தமிழ்ப் பிரச்சினைகளைப் பார்ப்பீர்களாளுல், இந்த அடிப்படையிலேதான் அப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற கருத்து உண்மையில் உங்களுக்கு இருக்குமென்ருல் அது தீர்க்க முடியாத ஒரு பிரச்சினை அல்ல;

ஆகவே இந்தக் கட்டத்தில் நாட்டைப் பிரிக்கிற கதைக்கு இடமே இல்லை. உலக நாடுகள் ஏற்றுக் கொண்ட இன்னுமொருதத்துவம் அடிமைத்தனம்பூரணமாக உலகம் முழுவதிலும் அகற்றப்பட வேண்டும் என்பது.

உலகில் காலனித்துவத்துக்கு முழுமையான முடிவு ஏற்படவேண்டும்.

திரு. மொண்ரேகு ஜயவிக்ரம:

ஆம், நிச்சயமாக!

திரு. வீ. என். நவரதினம்: அடிமைத்தனம் என்ருல் என்ன என்ற விடயத்திலே தெளிவான கருத்து இல்லாத காரணத்திஞலேதான் இன்னும் சில பிரச்சினைகள் தொடர்ந்து இருந்து வருகின்றன. இந்த நாட்டிலே இருக்கின்ற தலைவர்கள் ஆட்சிக்குப் பொறுப்பாக இருக்கின்றவர்கள் வருடத்திற்கு வருடம்வெளிநாட்டு, உள்நாட்டு மேடைகளில் ஏறி இலங்கையிலே தமிழ்ப் பிரச்சினை எதுவும் இல்லை என்று கூறுவதால் மாத்திரம் தமிழ்ப் பிரச்சினை ஒரு போதும் தீராது.

1956 ஆம் 1958 ஆம் ஆண்டுகளிலே காலஞ்சென்ற பிரதமர் கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க லண்டனில் கூறிஞர், தாம் தமிழ்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்துவிட்டதாக. 1960ம் 1961ம் ஆண்டுகளிலே இன்றைய அத்தனகலைப் பிரதிநிதியாக இருக்கின்றவரும் அன்றைய பிரதமருமான திருமதி சிறிமாவோ ஆர். டி. பண்டாரநாயக்க லண்டனில் கூறிஞர் இலங்கையிலே தமிழ்ப் பிரச்சினை தீர்க்கப் பட்டுவிட்டது. என்று.

அதேமாதிரி இப்பொழுது அரசாங்கத்தில் இருக்கின்றவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது இதே கருத்துக்களைத்தான் கூறுகின்ருர்கள். அப்படிக் கூறுவதால் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது,

ஜனதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன அவர்கள் அண்மையில் டெல்லியில் பேசுகின்றபோது ஒரு வார்த்தை கூறி



ஞர்; அதாவது, எனது நாடு 1815ஆம் ஆண்டிலே தனது சுதந்திரத்தை இழந்தது என்று. My country lost its freedom in the year 1815. அப்படி அவர் எந்த நாட்டை மனதில்வைத்துச் சொன்ஞரோ எனக்குத் தெரியவில்லை.

கௌரவ உப சபாநாயகர் அவர்கள் வசிக்கின்ற பிரதேசம் 1815இல் சுதந்திரத்தை இழந்தது அல்ல. கௌரவ இராசாங்கஅமைச்சருடைய கோட்டே பகுதியும் 1815 இலே சுதந்திரத்தைஇழக்கவில்லை..ஆகவே, 1815ல் இழந்த சுதந்திரத்தை இப்பொழுது மீண்டும் பெற்றுவிட்டோம் என்று கூறுகின்றபொழுது எந்தப் பகுதியைப்பற்றியது அது என்ற விஷயத்தில் அவருக்கு ஏதோ மனக்குழப்பம் ஏற்படுகின்றது.

எங்களைப் பொறுத்த அளவில் நாம் அதற்கு ஏறக்குறைய இரண்டரை நூற்ருண்டுகளுக்கு முன்னர் எமது சுதந்திரத்தை இழந்தோம்; அதாவது 1619ஆம் ஆண்டிலே போர்க்களத்திலே இழந்தோம். நாம் நமது இறைமையை 1619ம் ஆண்டு போர்த்துக்கீயரிடம் இழந்தோம்.

ஆனந்ததிஸ்ஸடீஅல்விஸ்: அதன் முன்பு நீங்கள் கோட்டையிலிருந்து ஆளப்பட்டீர்கள்.

நவத்: சிலகாலம் நாம் கோட்டை இராச்சியத்திஞல் ஆளப்பட்டிருக் [illegible] இராசதானியின் ஆட்சிக்கு அடங்கியிருந்திருக்கலாம். எப்படியாயினும், நாம் பூரண இறைமை கொண்ட தனி அரசாக, அயலவர்களுடன் நட்புறவு பூண்டு அமைதியாக வாழ்ந்திருந்தோம்.

பிரேமதாசா: இவையெல்லாவற்றையும் இங்கே கூறவேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டது?

நவம்: நாம் அனைவரும் ஒன்ருக வேலை செய்ய வேண்டுமாயின் எமது பிரச்சினையின் அடிப்படையை நீங்கள் உணர வேண்டும்.

பிரேமதாசா: பிரச்சினை என்ன? நீங்கள் தாம் எம்முடன்சேருசிறீர்கள் இல்லை:

நவம்: இது உங்களுடன் சேருவதா இல்லையா என்ற பிரச்சினையல்ல. உங்களுக்கு இது விளங்கவில்லையென்ருல்......

ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ்: இல்லை, நீங்கள் இந்தப் பக்கம் வந்தால், நாம் அரசியல் சட்டத்தைத்திருத்துவோம்.

நவம்: "தேசிய இனத்தின் தனித்துவத்தை நீங்கள் அங்கீகரித்து, இருதேசிய இனங்கள் வாழுவதாக...''

டென்சில்பெர்ஞண்டோ: தனித்துவம் இருக்கிறது. யார் இல்லையென்று கூறியது.

எம்.எச்.மொகமத்:இனங்கள் பல உண்டு — ஆனல் நாடு ஒன்று தான்.

நவம்: நீங்கள் பிரச்சினையைப் புரிந்து கொண்டிருப்பதன் லட்சணம் அவ்வளவு தான். இதற்காக நாம் மனம் வருந்துகிருேம்.

ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ்: எங்கள் கட்சி ஐக்கிய தேசியக் கட்சி.

நவம்: இந்தப் பிரச்சினை எமது நாட்டுக்கு மட்டும் உரிய பிரச்சினை மட்டுமல்ல; உலகின் பல நாடுகளில் இதே போன்ற பிரச்சினைகள் இருந்துகொண்டேயிருக்கின்றன. அதிகார வெறி பிடித்த ஏகாதிபத்திய வாதிகள், 16ம், 17ம் நூற்ருண்டுகளில், ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் உள்ள சுதந்திர நாடுகளை கைப்பற்றிஞர்கள். இந்த நாடுகளைத் தனித்தனியே நிர்வகிப்பதற்கு கஷ்டப்பட்டஏகாதிபத்தியவாதிகள் தங்கள் வசதிக்காக இந்த நாடுகள் அனைத்தையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்தார்கள். உதாரணமாக, வட ஆபிரிக்காவிலுள்ள ஸ்பானியர்கள் மொராக்கோ, சகாரா போன்ற சுதந்திரமும் இறைமையையும் கொண்ட நாடுகளைக் கைப்பற்றினர். சில காலத்துக்குப்பின் ஏகாதிபத்திய வாதிகள் தங்கள் வசதிக்காக இந்த நாடுகள் அனைத்தையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து அதற்கு ஒரே பெயரைச் சூட்டினர். பல நூற்ருண்டுகளுக்கு, பல நாடுகள் ஒன்ருகப் பிணைக்கப்பட்ட அந்தப் புதிய அமைப்பு புதிய பெயரில் நிர்வாகம் நடத்தியது. அன்னிய ஏகாதிபத்தியம் வெளியேறியவுடன் அங்கு ஒரு புதிய தேசம் உருவானது.

ஆனல் அந்தப் புதிய தேசத்திலுள்ள சிறிய தேசங்கள் தமது சுதந்திரத்துக்காக இன்று போராடி வருகின்றன. மொரொக்கோ ஆட்சியின்கீழ் தம்மைக்கொண்டு வந்தவர்கள் அன்னியர்களே யென்று மேற்கு சகாரா மக்கள் கூறுகிருர்கள். நாங்கள் ஒரு தனிநாட்டினம்; நாம் ஒரு தனித் தேசம் காலாதிகாலமாக தனியாக வாழ்ந்தவர்கள் நாம். ஆகவே எமது சுதந்திரத்தைக்கோருவதற்கு எமக்கு உரிமையுண்டு என்று அவர்கள் கூறுகிருர்கள்.

எம். எச். மொகம்மத்; அல்ஜியர்களே அவர்களுக்குப் பின்ஞல் நிற்கிருர்கள்.

நவம்: யாரால் அவர்கள் ஆதரிக்கப்படுகிருர்கள் என்பது பிரச்சினை அல்ல; இதுவும் ஒருவகையான குடியேற்ற வாதம் என்பதை அறிந்த உலகம் முழுவதும் மேற்கு சகாரா மக்களை ஆதரிக்க வேண்டிய நிலையில் உள்ளது. இங்கு எமது நாட்டில் உள்ள நிலையும் இதே தான். நாங்கள் மூன்று சுதந்திர, இறைமையுள்ள தனித்தனி அரசுகளாக இருந்தவர்கள்.

கப்டன் செனிவிரத்திஞ: அது எப்போது?

நவம்: உறுப்பினர் வரலாற்றைமறந்து விட்டாரா? அன்னிய ஆட்சி இந்நாட்டுக்குள் எப்போது வந்தது? அன்னிய ஆட்சி இங்கு காலடி எடுத்து வைத்த போது, இங்கு மூன்று தனித்தனி அரசுகள் இருந்தன. அதை நீங்கள் மறுக்க முடியுமா?

பிரேமதாசா: மூன்று தனித்தனி அரசுகள் மீண்டும் வேண்டும் என்கிறீர்களா?

நவம்: இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லையென்ருல்...?

பிரேமதாசா: தீர்வு இருக்கிறது.

ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ்: குவேனியின் மகளைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

நவம்: பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லையென்ருல், அந்நிய ஆட்சியிடம் நாம் இழந்த இறைமையை மறுபடி நிலைநாட்டுவதைத் தவிர நாம் செய்யக்கூடியது வேறு எதுவும் இல்லை. (குறுக்கீடுகள்)

ஆனந்ததிஸ்ஸ டீ அல்விஸ்: கோட்டைக்கு எனக்கு ஒரு தனி இராச்சியம் வேண்டும்.

வி. தர்மலிங்கம்: அதைக் கோருவதற்கு உமக்கு உரிமையுண்டு

எம். எச். மொகமத்: தனி இராச்சியம் எதுவும் தேவை இல்லை; இங்கு இருப்பது ஒரேயொரு நாடு தான்! (குறுக்கீடு)

ஓர் உறுப்பினர்: நாம் கோட்டைக்கு ஒரு இராச்சியமும், சீதாவாக்கைக்கு வேருேர் இராச்சியமும் கோரப்போகிருேம்.

நவம்: இந்த அரசுகள் யாவும் ஒன்றுபட்டு, ஒரு

—4-ம் பக்கம் பார்க்க

---

### தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப் பணியக வாராந்தக் கருத்தரங்கு

காலம்:- 2-12-78 சனி மாலை 6-00 மணி.

1. ''மும்முறை கடல் கொண்டதுதமிழ்நாட்டை'' —வரலாறு தரும் பாடம்

2. ''சூருவளியால் அழிந்த தமிழ் ஈழப் பகுதிகளை மட்டும், புனரமைக்கும் பணிக்கு நம்மை அர்ப்பணிப்போம்.'' அனைவரும் வருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிறீலங்காவிலுள்ள தமிழ்த் தொழிலாளர்கள் 'இரண்டாந்தரத் தூசு'கள் ஆக்கப்பட்டுள்ளனர்!"

'Maryknoll' என்ற ஆங்கில சஞ்சிகை அமெரிக்காவிலுள்ள கத்தோலிக்க வெளிநாட்டு மிஷன் சங்கத்தினரால் (Catholic Foreign Misson Society of America) வெளியிடப்படும் ஓர் சஞ்சிகையாகும். இச்சஞ்சிகையின் செப்டம்பர் 1978 இதழில் "Tamil Labourers in Sri Lanka Are Second Class Dust—Workers Pay A High Price For Tea" எனும் தலைப்பில் Edward M. Gerlock என்பவர் படங்களுடன் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களின் நிலைமை பற்றி ஓர் கட்டுரையை எழுதியுள்ளார். அதன் தமிழாக்கம் இங்கு இடம் பெறுகிறது.

**தேயிலைத் தோட்டங்களில் கூலி வேலை செய்வதற்காக பல நூற்றுண்டுகளுக்கு முன் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தமிழர்கள். இன்று சிறீலங்காவில் ஒதுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.**

இந்துக்களின் பாரம்பரிய முறைப்படி, ஒரு வயது சென்றமூதாட்டி தனதுதலையில் அடித்தபடி 'மறுபடியும் நாம் ஒருவரையொருவர் சந்திப்போமா?'' என்று உள்ளம் குலுங்கி அழுது கொண்டிருக்கிறாள். வயது முதிர்ந்த ஆண்கள் தங்கள் கைகளைக்கூப்பி கண்களில் நீர் பெருக பிரியாவிடை கூறுகிறார்கள், புகையிரத நிலைய நடைபாதையில் அவர்களைச் சுற்றி வேறுபல குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் தத்தமது குடும்ப அங்கத்தவர்களுக்கு பிரியாவிடை கூறிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் நாடு கடத்தப்பட்டவர்கள். இவர்கள் தலைமன்னாரில் தங்கள் பயணத்தை ஆரம்பிக்கிறார்கள். சிறீலங்காவின் வட முனையிலிருக்கும் அந்தஇடத்திலிருந்து இந்தியாவுக்கு அவர்கள் கப்பலேறுகிறார்கள். பெரும்பாலோருக்கு இந்தப்பயணம் முன்பின் தெரியாதது. பலருக்கு இதுவே இறுதிப்பயணமாகவும் இருக்கும்.

அந்த மக்கள், இலங்கையின் தேயிலைத் தொழிலின் முதுகெலும்பாக இருந்து வந்த தமிழ்த் தொழிலாளர்கள். ஒன்றரை நூற்றுண்டுகளாக மனித முயற்சியால் தொடங்கப்பட்ட தேயிலைத் தொழிலுக்கு அவர்கள் அடகுப் பொருட்களாகவைக்கப்பட்டிருந்தவர்கள்; வர்த்தக நலன்களுக்கு பலியாக்கப்பட்டவர்கள்; அத்துடன் அரசாங்கங்களின் பாரபட்சமான கொள்கைகளுக்கும் உள்ளாக்கப்பட்டவர்கள்.

காலனித்துவவாதிகள் 1820ம் ஆண்டு கோப்பிச் செய்கையை ஏராளமான நிலங்களில் ஆரம்பித்த நேரத்திலிருந்து இந்த மக்களின் துயர்தோய்ந்த வரலாறு ஆரம்பமாகிறது. தோட்டத்தொழிலில் கூலி வேலை செய்வதற்கு உள்ளூர் சிங்கள விவசாயிகள் ஈடுபாடு காட்ட முன்வராததால், அயலிலுள்ள தென்இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்வதென்று, தோட்ட முதலாளிகள் தீர்மானித்தார்கள்.

அன்னிய நாட்டுப் பிரபுக்களால் கொண்டுவரப்பட்ட தமிழர்கள் முற்றிலும் வேறுபட்ட மொழி, மதம், பழக்க வழக்கங்கள், சாதியமைப்பு போன்றவைகளால் பல தொல்லைகளை அனுபவிக்க நேர்ந்தது. 1841 முதல் 1849ம் ஆண்டுக்கு இடையில் மட்டும், 70,000 தொழிலாளர்கள், அல்லது இறக்குமதி செய்யப்பட்ட தொழிலாளர்களில் 25வீதமானோர் மலேரியாவினாலும், உணவுப் பற்றாக்குறையாலும், தோட்ட முதலாளிகளின் மனிதத்தன்மையற்ற நடவடிக்கைகளினாலும் உயிரிழந்தனர்.

அதன்பின், 1870ல் ஏற்படுத்தப்பட்ட கோப்பிச் செய்கை ஒரு வகை கிருமியால் அழிக்கப்பட்டதை தொடர்ந்து உற்பத்தி குன்றியது. இதையடுத்துத்தான் இப்போது உலகப்பிரசித்தி பெற்றுள்ள 'சிலோன் டீ' எனப்படும் தேயிலைச் செடிகள் பயிரிடப்பட்டன. கோப்பிச் செய்கையை விட, தேயிலைச் செய்கைக்கு தொழிலாளர்களின் அக்கறை அவசியம். கொழுந்துகளும், இலைகளும் ஒவ்வொரு நாளும் அவை தம் வாசத்தை இழப்பதற்கு முன்னமேகிள்ளப்படவேண்டும். இதனால் தொழிலாளர்கள் தேயிலைத் தோட்டங்களிலேயே வசிக்க வேண்டுமென்று தோட்ட முதலாளிகள் விரும்பினர். இந்தத் தென்னிந்திய தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்காக 'லைன்கள்' எனப்படும் குடியிருப்புக்கள் தோட்டங்களில் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இதன் பின் இலங்கையின் பிரதான ஏற்றுமதி கோப்பியிலிருந்து தேயிலையாக மாறியது.

1930ம் ஆண்டளவில் சிறீலங்காவில் குடியேறிய தமிழர்களினதும் அவர்களது குடும்பத்தவர்களினதும் தொகை ஏழு இலட்சமாக இருந்தது. 1931ம் ஆண்டு வழங்கப்பட்ட குடியுரிமைகள் காரணமாக, தமிழர்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் நிலையை அடைந்தார்களாயினும், இந்த நம்பிக்கை ஒரு சில காலமே நீடித்தது. 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின்காரணமாக பெரும்பான்மையான தமிழ்த் தோட்டத்தொழிலாளர்கள் நாடற்றவர்களாக்கப்பட்டனர். 1970ம் ஆண்டு, தேயிலைத்தோட்டங்களில் வேலைசெய்த 570,000 தமிழர்களில் 437,000 பேர் குடியுரிமையற்றவர்களாக இருந்தார்கள். 1974ம் ஆண்டு 850,000 தமிழர்கள், குடியுரிமையற்றவர்களாகஇருக்கிறார்கள்.

தமிழ்த் தோட்ட தொழிலாளர்களுடன் எவ்வித ஆலோசனையும் கலந்து கொள்ளாமல், 1964ம் ஆண்டு இந்தியாவும் இலங்கையும் தமக்குள் செய்து கொண்ட சிறிமா— சாத்திரி ஒப்பந்தத்தை சுற்றியே இன்றைய பிரச்சினையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இந்த உடன்படிக்கையின்படி 535,000 தமிழர்களை ஏற்றுக்கொள்ள இந்தியா சம்மதித்தது; 3இலட்சம் பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டது. 150,000 பேரின் பிரச்சினைக்குப்பின்னர்தீர்வு காணுவது என்று பிற்போடப்பட்டது.

## அமெரிக்க கத்தோலிக்க சஞ்சிகையில் மலையகத் தமிழர் பற்றிய படப்பிடிப்பு!

மனிதர்கள் என்ற அளவில்கூட தமிழர்களின் சம்மதத்தை அறியாமல், பிடிவாதத்தின் காரணமாகவோ, அல்லது ஒரு வெறியுணர்ச்சியின் காரணமாகவோ—ஒரு பெரிய மனிதக் கூட்டம் நாடுகடத்தப்படுகிறது. தமிழர்கள் தமது நிலையை முன்னேற்றிக் கொள்ளவும் மிகவும் அற்பமான சூழ்நிலைகளே இருந்தன.

1975ம் ஆண்டு சிறீலங்கா தேயிலைத்தோட்டங்களைத் தேசியமயமாக்கியபோது, தொழில், வேலைவாய்ப்புக்களில் சிங்களக் கிராமவாசிகளுக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது. அவர்களுக்கே கிராம கூட்டுறவுக் கடைகளில்பங்கும் தோட்டங்களில் சொந்த உரிமையும் தரப்பட்டது.

தமிழர்கள், தமக்குத் தெரிந்த, தம்மால் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒரேயொருநாடான சிறீலங்காவை விட்டு வெளியேறி, தங்கள் மூலத்தாயகம் என்று கூறப்படும் ஒரு நாட்டுக்கு செல்லவேண்டிய நிலையிலுள்ளனர்.

இதுபற்றி வாழ்நாள் முழுவதும் தேயிலைத்தோட்டங்களிலே வேலை செய்த ஜோசெப் என்ற தமிழ்த் தொழிலாளி மனமுடைந்து பின்வருமாறு கூறுகிறார்:—

''எங்கள் தந்தையும் பாட்டனும் மற்றும் தொழிலாளர்களும், மலேரியாவினால் செத்தும், பட்டினியால் வாடியும் இந்தக் காட்டை வெட்டித்தோட்டம் ஆக்கினார்கள். நாம் இத் தோட்டத்தை உருவாக்கினோம். அதுபற்றி யாருக்கும் அக்கறையில்லை. இப்போது நிலம் பங்குபோடப்படுகிறது. ஆனால் தேயிலையை உருவாக்கும் தொழிலாளிகளுக்கு அது கிடைக்காது. அது அரசியல்வாதிகளின் நண்பர்களுக்குத்தான் கிடைக்கும். தொழிலாளர்கள் வெளியேறுமாறு நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.''

யோசெப்பினதும் அவர் போன்ற சகதொழிலாளர்களினதும் தலைவிதி நிர்ணயிக்கப்படாத போதிலும்—ஒவ்வொருநாளும் வாழ்வதற்காக அவர் போராடிக் கொண்டேயிருக்கிறார். அவரும் அவரது மனைவியும், ஆறுபிள்ளைகளும் தமது வயதான தாயாருடன் ஒரு 'லைன்' வீட்டில் இருக்கின்றனர்.

பெண்கள் ஒருநாளுக்கு 30 இறுத்தல் தேயிலை கிள்ள வேண்டும் இதற்கு அவர்களுக்கு ரூபா 5.25 (ஏறத்தாழ 50 சதம்) தரப்படுகிறது. ஜோசெப் ஒரு நாளைக்கு 60 சதம் சம்பாதிக்கிறார். ஆண்களைப் பொறுத்தவரை அவர்கள் செய்யும் வேலைக்கேற்றபடியே வருமானம் கிடைக்கிறது.

''இதனால்தான் பெரிய பிள்ளைகளையும் உதவிக்கு கொண்டுவரவேண்டியுள்ளது. நான் எனது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்ப முயற்சிக்கிறேன். ஆனால் நாம் சாப்பிடுவதற்கு உழைப்பதற்காக அவர்களைப் பாடசாலைகளுக்கு சில வேளைகளில் அனுப்ப முடிவதில்லை...'' என்கிறார்.

தமிழ்த் தொழிலாளர்கள் தாம் உற்பத்திசெய்யும் குறைந்ததரமுடைய ''2வது வகுப்பு—தூள்'' தேயிலையின் நிலையிலேயே வாழ்கிறார்கள். ஏனைய நல்லரகமுடைய தேயிலை முழுவதும் எடுக்கப்பட்டபின்னர்இறுதியாக எஞ்சி விடப்படுவது தான் இந்தத் தூள் தேயிலையாகும். இந்தத் தூள் தேயிலையுடன் நிலத்தைக் கூட்டும்போது வரும் தூசு துப்பட்டைகளும் கலந்து விடுவதுண்டு. இந்தத் தேயிலை இறுத்தல் 4சதத்துக்கு விற்கப்பட்டாலும் கூட,—சிறீலங்காவின் தேயிலைக்கு ஆக உச்சவிலை கொடுத்துவிட்ட தமிழ்த் தொழிலாளிக்குஅதுசென்று கிடைப்பது இல்லை.''


## சுதந்திரன்
### [வாரமிருமுறை]
### வெளிநாடுகள் — சந்தா விபரம்
( இலங்கை நாணயப்படி )

இந்தியா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ரூபா | 226.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 113.00 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 100.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 50.00 |

மலேசியா, சிங்கப்பூர், மத்தியகிழக்கு நாடுகள்

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு | ரூபா | 260.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 130.00 |
| கடல் மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 100.00 |
| ,' ,, | (அரையாண்டு) | ,, | 50.00 |

லண்டன், அவுஸ்திரேலியா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 320.00 |
| ,, ,, | (அரையாண்டு) | ,, | 160.00 |

அமெரிக்கா

| | | | |
|---|---|---|---|
| விமான மார்க்கம் | (ஓராண்டு) | ,, | 362.00 |
| ,, ,, | (அரையாண்டு | ,, | 181.00 |

அனுப்பவேண்டிய முகவரி:

நிர்வாகி சுதந்திரன்,
15, மகாத்மாகாந்தி வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தை தொழில்மயமாக்க இதுவேசரியானதருணம்!

## பணத்தை முடக்காமல், தொழிலில் அதை முதலீடு செய்யுங்கள்!

**சிங்கள நாட்டைச் சிங்கார புரியாக்கி: சிங்கப்பூரைப்போன்ற வளமுள்ள நாடாக்க மாற்ற வேண்டும் எனத்திட்டமிட்டு, இரண்டு வரவு செலவுத் திட்டங்களையும் யூ. என். பி. அரசு தயாரித்துள்ளது. தனியார் துறையினர் விரைந்து முன்னேறி பரந்து பயனுறுத்த வரவு செலவுத் திட்டம் வழிவகுக்கும் என நிதியமைச்சர் அறிவித்துள்ளார். தனியார் துறையினர் சிங்கள நாட்டைச் சிங்காரபுரியாக்கக் கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு இது எனவும் கூறியுள்ளார். இதற்காகச் சிங்களத் தனியார் துறையை மட்டுமல்ல உலகின் முயற்சியாளர்கள் அனைவரையும் அழைத்துள்ளார்.**

தமிழ் ஈழத்தில் உள்ள தனியார் துறையினரும் இந்த வசதிகளைப் பயன்படுத்தித் தமிழ் ஈழம் தழைத்து ஓங்கும் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தனியார் துறையில் உள்ள முயற்சியாளர்கள் தனியாகவும் கூட்டாகவும் உலகின் ஏனைய நிறுவனங்களுடனும் சேர்ந்து, தமிழ் ஈழப்பகுதிகளைப் பொன் கொழிக்கும் பூமியாகமாற்றவேண்டும். பணத்தை வங்கிகளிலும், சேமிப்பு நிறுவனங்களிலும் இடும்நிலை மாறித் தொழிற்சாலைகளில் முதலீடு செய்தல் வேண்டும்.

மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் போன்ற துறைகளில் தமிழ்ஈழம் பற்றாக்குறையின்றி இருப்பினும் மனித நாகரீகத்தின் வளர்ச்சிக்கேற்பத் தமிழ் ஈழமும் வளரவேண்டுமானால், தமிழ் ஈழத்தில் தொழில் நுட்ப அடிப்படையில் பொருளாதாரம் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஆடைத்தொழிற்சாலைகள், கமத்தொழில் உபகரணங்கள், எந்திரங்கள் உற்பத்திநிலையங்கள், கட்டிடப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் என்பன பெருக வேண்டும். தமிழ் ஈழத்தை தொழில் மயமாக்கத் தமிழ் முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும். அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்பவளர்ச்சி என்பன அளப்பரிய முன்னேற்றம் அடைந்துள்ள இக்கால கட்டத்தில் அந்த வளர்ச்சியைப் பயன்படுத்தி தமிழ் ஈழம் தொழில் மயமாக்கப் படவேண்டும்.

### மக்களே மூலப்பொருள்

தமிழ் ஈழத்தில் உள்ள மூலப்பொருட்களை மட்டும் நம்பித் தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும் என்பது விதியல்ல. சிங்கப்பூர், யப்பான்போன்ற நாடுகளில் மூலப்பொருட்கள் எதுவும் இன்றி ஏராளமான உற்பத்திப் பொருட்கள் வெளிவருகின்றன. அந்த நாடுகளின் மக்களே அந்த நாட்டின் அசைக்க முடியாத மூலப்பொருளாக அமைகின்றனர். முயற்சியாளர்களான மக்களை மூலப் பொருளாகக் கொண்டநாடு நமது தமிழ் ஈழம்—உலகின் பல நாடுகளில் இவர்களின் முயற்சி முழுமையாக உறிஞ்சப்படுகின்றது—தமிழ் ஈழம் மட்டும் பயனடையக் கூடாதா?

### முதலீடு செய்க

மாதவருவாயை நம்பி, பென்சனை நினைத்து அதற்காக அடிமை நிலையைக் கூட ஏற்கக்கூடிய மனோநிலையைத் தமிழ் மக்களிடையே பிரிட்டிஷார் வளர்த்தனர். எமது பொருளாதார நோக்கைப் பின்னடையச் செய்த சீதனக் கொடுமையும் இந்த அடிப்படையில் எழுந்தது. அடிமை மோகம் அகல வேண்டும். முயற்சியாளர்கள் முன்வந்து முதலீடு செய்து தமிழ் ஈழத்தைத் தொழில் மயமாக்க வேண்டும்.

## தமிழ் செல்வந்தர்களின் சிந்தனைக்கு!

உணவு உற்பத்தித்துறையிலும், கடற்றொழில்துறையிலும் முன்னோடிகளாக்கி, முயற்சியாளர்களாகி, சிங்கள மக்களுக்கும் உலகுக்கும் எடுத்துக்காட்டாக உள்ள தமிழ் ஈழ மக்கள், தொழில் மயமாக்கத்திலும் தொழிற்சாலை அமைப்பதிலும் தம் கவனத்தைத் திருப்ப வேண்டும்.

சிங்கள அரசைச் சிங்கார புரியாக்கும் அரசின் அளப்பரிய திட்டங்கள் தமிழ் ஈழம் பொன் கொழிக்கும் பூமியாக மாறத்தடையாக இருக்கமாட்டாது. மாறாக உதவியாக இருக்கும் அடிபட்டு உதைபட்டு அடைபட்டுக் கடைகெட்ட நிலையிலும் தமிழர்கள் தொடர்ந்தும் சிங்கள நாட்டில் முதலீடு செய்து வருகின்றார்களே!

### தமிழ் ஈழமே பாதுகாப்பு

1977 கலவரத்தில் நூறு கோடி ரூபா பெறுமதியான தமிழரின் உடைமைகள் அழிக்கப்பட்டன. சிங்கள நாட்டில் சீர்குலைக்கப்பட்டன. தமிழ் ஈழத்திலுள்ள உடைமைகள் தமிழர்க்குரியவையாகவே இருந்தன. முதலீட்டாளர்கள் இதனை உணரவேண்டும் கெக்கிராவை, தம்புல்லை, அனுராதபுரம் ஆகிய இடங்களில் தமிழர்கட்குச் சொந்தமான பாரிய தொழில் நிலையங்கள் சேதப்படுத்தப்பட்டமை நினைவில் அகலாது. தமிழ் ஈழத்தில் இருந்த பல தொழிற்சாலைகள் பாதுகாப்பாக இருந்தன—தமிழ் முதலீட்டாளர்கள் இதனை உணர்கின்றார்கள் இல்லையே!

மீண்டும் மீண்டும் சிங்கள நாட்டில் முதலீடு செய்கின்றார்கள். தமிழ் ஈழம் பொருளாதாரக் கன்னியாகவே உள்ள நாடு, தண்ணியதான தமிழ் ஈழ எழிலை விட்டுச் சினந்தெழும் சிங்கள நாட்டுக்குச் செல்லும் தமிழ் முதலீட்டாளர்கள் தன்மானம் உள்ளவர்களல்லர்.

### இதுவே தருணம்

தொழில் மயமாக்கத்துக்குரிய சூழல் இதுவே. நிதி நிறுவனங்கள், தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் நிறுவன்ங்கள், தமிழ் அரசியல் தலைவர்கள், தமிழ் இளைஞர்கள் யாவரும் தமிழ் முதலீட்டாளர்கட்கு உதவியாக உள்ளனர். வங்கிகள் கடன் வழங்குகின்றன. கைத்தொழில் அபிவிருத்திச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்கட்கு 75% நிதியைக் கடனாக வழங்குகின்றன. தமிழ் ஈழத்தில் உள்ள வங்கியாளர்கள் தமிழ் ஈழ வளர்ச்சியில் மிகுந்த அக்கறை உள்ளவர்களாக உள்ளனர். ஏழு லட்சம் வரையுள்ள எந்திர சாதனங்களை இறக்குமதி செய்ய அரசின் அனுமதி தேவையில்லை. மூலப் பொருட்கள் பெரும்பாலானவற்றை இறக்குமதி செய்யலாம். அரசின் கெடுபிடிகள் குறைவு. பிறநாட்டு நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாகத் தொடங்க DFCC எனப்படும் நிறுவனம் கடனுதவி வெளிநாட்டிலும் செய்து தருகின்றது. முதலீட்டாளர்கள் இதனை உணர வேண்டும்.

### முதல்வாய்ப்பு

தனியார் துறைக்குத்தரப்பட்ட கடைசிவாய்ப்பு எனச் சிங்கள நிதி அமைச்சர் கூறினார். நான் கூறுகிறேன். தமிழ் ஈழம் தொழில் மயமாக்கப்படுவதற்குரிய முதல் வாய்ப்பு இது. அதுவும் தமிழ் மக்களுக்குக் கிடைத்த முதல்வாய்ப்பு இது. சிங்கள அரசின் சிங்கள மயமாக்கக் கொள்கையை உதறி எறிந்து, தமிழ் முதலீட்டாளர்கள் தமிழ் ஈழத்தை நாடிவர வேண்டும் தமிழ் ஈழத்தில் உற்பத்திப் பொருட்களையும் நுகர்ச்சிப் பொருட்களையும் எந்திர சாதனங்களையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உருவாக வேண்டும்.

விரைந்து செயற்படுங்கள் நிறைந்து பயனுறுத்துங்கள்.

**க. சச்சிதானந்தன்**
(தமிழர்பொருளாதாரஇயக்கம்)

---

—2-ம் பக்கத் தொடர்

மாணவர்களுக்காக வகுப்புவாத முதலைக் கண்ணீர் வடிப்பதன் அர்த்தம்என்ன?

கேகாலையைச் சேர்ந்த விகாரை ஒன்றில் பரீட்சைச்சான்றிதழ்கள் மோசடிகள் நடந்து வந்தது தொடர்பாக ஒரு புத்த பிக்கு கைது செய்யப்பட்டுள்ளார். இதை ஆதாரமாகக் கொண்டு கல்வித்துறையில் உள்ள சகல பௌத்தர்களும் மோசடிகளில் ஈடுபட்டுள்ளார் என்று யாராவது கூறினால் அவரை நாம் ஒரு பைத்தியம் என்றோ அல்லது மிகக் கேவலமான வகுப்புவாதி என்றோ தான் குறிப்பிடுவோம். இத்தகைய ஒரு அவதூறே தமிழ்க் கல்வித் துறை மீது சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது அமைச்சர்கள் மட்டத்தில் (கல்வி அமைச்சு தவிர்ந்த) பேசப்பட்டு வரும் இன ரீதியான மக்கள் தொகை விகிதாசார அடிப்படையில்கல்வி வாய்ப்புக்களை தரப்படுத்தல் செய்யும்படியான கோரிக்கைகளை நிராகரிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்வதுடன் இத்தகைய ஒரு தீர்மானத்திற்கு எதிராக ஜீவமரணப் போராட்டத்தை தவிர தமிழ் மாணவர்களுக்கு வேறு மார்க்கம் இருக்க மாட்டாது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

சென்ற அரசினால் 1971ல் அமுலாக்கப்பட்ட தரப்படுத்தலை விட இன ரீதியான தரப்படுத்தல் மிகவும் பாரதூரமானது. இது அமுலாக்கப் படுமாயின் 1971 இல் அமுலாக்கப்பட்ட தரப்படுத்தலை விட படு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இது அமையும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தமிழ் மாணவர்களை [illegible] கிய இலங்கையின் பிரஜைகள் என்றோ அல்லது சில தரப்பினரால் கூறப்படுவது போன்று அடிமைபடுத்தப்பட்ட தமிழ் ஈழத்தின் பிரசைகள் என்றோ உங்கள் அரசு கருதுகின்றது என்பதை தேசிய ரீதியாகவும் புலப்படுத்தும் ஒரு சான்றாகவே இது பற்றிய தங்கள் அரசின் முடிவு அமையும் என்பதை இத் தருணத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.

அண்மையில் தாங்கள் தமிழ் மக்களது பிரச்சனைகள் தேசிய ரீதியில் தீர்க்கப்படும் என்று இந்திய மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கும், தங்களது அமைச்சர்கள் சிலரது கருத்துக்களுக்குமிடையில் பாரதூரமான முரண்பாடுகள் உண்டு என்பதையும்சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

[illegible] வில்லை; நியாயத்தையே எதிர்பார்க்கிறோம்.

---


**இப்பொழுது கிடைக்கிறது!**

தமிழர்களுக்கு தனியரசு இருந்ததா
என்று கேட்போருக்கு மறுக்சொணா
வரலாற்று ரீதியான பதில்—

**கலாநிதி சி பத்மநாதன்**
அவர்கள் எழுதிய

**KINGDOM OF JAFFNA**
**(யாழ்ப்பாண அரசு)**

ஆங்கில நூல்

விலை தனிப்பிரதி ரூபா 30.00
வியாபாரிகளுக்கு இருபது வீதம் கழிவுகொடுக்கப்படும்.

இடைக்குமிடங்கள்:

(1) அருள் மா. இராசேந்திரம்.
111, பிக்கறிங்ஸ் வீதி, கொழும்பு-13.
(2) சுதந்திரன்,
15, மகாத்மாகாந்திவீதி, யாழ்ப்பாணம்.
(3) காந்தளகம்,
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாணவர்களுக்கு சிங்களப் படிவங்கள்

## கல்வி அமைச்சின் இனவாதம்

**யாழ்** தொழில்நுட்பக்கல்லூரியில் சிவில்பொறியியல் இறுதியாண்டு மாணவர்களுக்குரிய நேரசூசிகை, பரீட்சை தொடங்கும் காலங்கள், மாணவர்கள் நிரப்பும் விண்ணப்பங்கள், இவை நிரப்புவதற்குரிய அறிவுறுத்தல்கள் ஆகியன அனைத்தும் தனிச்சிங்களத்தில் உயர்கல்வி அமைச்சினால் கடந்தவாரம் அனுப்பப்பட்டது.

குறித்த பரீட்சை எடுக்கும் மாணவர்கள் இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று மறுத்ததினால் கல்லூரியின் பொறியியல் பகுதி நிர்வாகத்தினர் இவை அனைத்தையும் உயர்கல்வி அமைச்சுக்கு திருப்பி அனுப்பி விட்டார்கள்.

கடந்த காலங்களில் மேற்படி கல்லூரிக்கு பரீட்சைகளுக்குரிய விண்ணப்பங்கள், அறிவுறுத்தல்கள், நேரசூசிகைகள் அனைத்தும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கிடைக்கப்பெற்றன. ஆனால் உயர்கல்வி அமைச்சின் கீழ் த் தொழில்நுட்பக்கல்லூரி வந்ததும் மேற்படி கல்லூரிக்கு அமைச்சில் இருந்து வரும் கடிதங்கள் கூடுதலாக சிங்களத்திலேயே இருக்கின்றன.

சிலமாதங்களாக உயர் கல்விஅமைச்சு தமிழ்மாணவர்களுக்கு எதிராக எடுத்து வரும் இனத்துவேஷக் கொள்கைகளில் இதுவும் ஒன்று என மாணவர்களினால் பேசிக்கொள்ளப்படுகிறது. அத்துடன் பொறியியல் பகுதி நிர்வாகத்தினரின் துணிச்சல்மிக்க இச்செயலை கல்லூரியின் இதர பயிற்சி நெறி மாணவர்களும் பாராட்டியுள்ளனர்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர், தேவநாயகம் ஆகியோர் ஸ்ரீ லங்கா பாராளுமன்றத்தில் இந்நாட்டில் தமிழர் பிரச்சனை தீர்க்கப்பட்டுள்ளது. என்றும், இனிமேல் இரண்டாந்தரப் பிரஜைகள் என எவரும் இல்லையென்றும், சிங்கள மொழி தெரியாதவர்கள் எவர்தானும் பாதிக்கப்படமாட்டார்கள் என்று பேசிவரும் இவ்வேளையில் மேற்படி அமைச்சின் தனிச் சிங்கள கடிதம் ஜனாதிபதி, பிரதம அமைச்சர், ஆகியோரின் பிரசாரங்களை தூக்கி எறிந்துவிட்டதல்லாவா?

---


**துரித சலவைக்கு மில்க்வைற் சலவைப்பவுடர் வாங்கி உபயோகியுங்கள், பலஅளவுகளில் விற்பனையாகின்றது.**

மேலுறைகளை அனுப்பி பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்




மில்க்வைற்--யாழ்ப்பாணம்


---

## கெப்பிட்டல் 5-வது வாரம்

சசிகுமார், நிர்மலா, ஏ. வி. எம். ராஜன், மனோகரம்மா நடித்த—

# அவள்

(ஈஸ்மன் கலர்)

## லிடோ (யாழ்நகர்) 6-வது வாரம்

# எங்கள் தங்க ராஜா

— ஈஸ்மன் கலர் —

## கிங்ஸ்லி 7-வது வாரம்

(கொழும்பு)

சிவாஜி கணேசன் ஜெயலலிதா

சந்திரபாபு நடித்த-

# நீதி

[ புதிய பிரதி ஈஸ்மன் கலர் ]

## கெயிட்டி [கொட்டாஞ்சேனை]

ஜெமினி கணேசன், வைஜயந்திமாலா,

வீரப்பா, தங்கவேலு, ரங்கராவ்

- நடித்த -

# பார்த்திபன் கனவு

## செல்லமகால் 5-வது வாரம்

எம், என்: சிவராம், எஸ். என். தனரட்ணம்

விஸ்வநாதராஜா, சந்திரகலா,

அனோஜா, மாஸ்டர் ஹெஜி, செல்வம்

பொஸ்கோ நடித்த -

# அநுராகம்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org